பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 13 உ வியாழக்கிழமை (27-6-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 204

ஸ்ரீலங்கா உட்பட ஏழு நாடுகளில் இருந்து

# ஜேர்மனியில் அடைக்கலம் புகுந்தோர் பலவந்தமாக வெளியேற்றப்படுவர்!

## ஒரு லட்சம் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பம்

அம்ஸ்ரடாம், ஜூன் 27

ஜேர்மனியில் அடைக்கலம் கோரியுள்ள சுமார் ஒரு லட்சம் வெளிநாட்டு அகதிகளை அடுத்த வாரத்தில் இருந்து நிர்ப்பந்தமாக வெளியேற்ற ஜேர்மன் அரசு தீர்மானித்திருக்கிறது.

ஈரான், ஈராக், லெபனான், ஸ்ரீலங்கா, ஆப்கனிஸ்தான், எதியோப்பியா, சோமாலியா ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்படவிருக்கிறார்கள்.

இத்தகவலை நெதர்லாந்து வானொலி நேற்றிரவு வெளியிட்டது.

கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் ஒன்றிணைந்து ஜேர்மன் சமஷ்டிக் குடியரசை உருவாக்கியதை அடுத்து அந்நாட்டுக்குரிய ''வெளிநாட்டார் குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம்'' புதிதாக வரையப்பட்டது.

இந்தச் சட்டத்தின் கீழ் ஜேர்மனியில் அடைக்கலம் (Sanctuary) கோரும் அகதிகள் யார், அரசியல் தஞ்சம் (Asylum) கோரும் அகதிகள் யார் என்பதை வேறுபடுத்தி கண்டறியும் நடவடிக்கைகளை ஜேர்மன் அரசு மேற்கொண்டு வருகிறது.

புதிய சட்டத்தின் கீழ் அடைக்கலம் கோரியுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் உச்சி மாநாடு கொழும்பில் நடக்குமா?

சார்க் உச்சி மாநாடு கொழும்பில் நடைபெறுமா என்பது சந்தேகமாகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் 7 ஆம் திகதி சார்க மாநாடு கொழும்பில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்—

கொழும்பில் நிலவும் பதற்ற நிலையினால் மாநாடு அங்கு நடத்துவது கஷ்டம் என்ற ஒரு நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

எனினும் மாலைதீவு தலைநகர் மாலேயில் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெற இருக்கும் சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## திங்கள் முதல் பாடசாலைகள் இரு நேரமாக இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 27

அடுத்தமாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் பாடசாலைகள் இரு நேரமாக இயங்கவிருக்கின்றன.

இது தொடர்பான சுற்று நிருபத்தை பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பியுள்ளார்.

ஆறாம் ஆண்டில் இருந்து 13 ஆண்டு வரையுள்ள வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகளிலேயே இரு நேரம் வகுப்புகள் நடைபெறவிருக்கின்றன.

தீவுப்பகுதி காரைநகர், வலி - வடக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்விபயிலும் பாடசாலைகளில் இருநேர வகுப்பு நடக்க வசதியாக மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன. (ஒ-3)

## முல்லைத்தீவில் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

முல்லைத்தீவு நகரப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் சிலாவத்தைப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றனர். அப்போது மோதல் வெடித்தது.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் கடைசியில் பின்வாங்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5-15)

## ஷெல்வீச்சில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

பலாலியிலிருந்து நேற்று மாலை 4.30 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் ஏழாலை தெற்கில் சூராவத்தைப் பகுதியில் விழுந்து வெடித்ததில் மூவர் காயமடைந்தனர், இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

வயோதிபப் பெண்ணான தாமர்செல்லம், சிவபாலன் சுரேஷ்குமார் (வயது 17), புவனராசா பாலகேசவன் (வயது 20) ஆகியோரே காயமடைந்தனர்.

(ஒ-5-15)

## சிங், ஜோதிபாசு இருவரதும் ஆதரவு கேட்கிறார் ராவ்!

ஜனதா தள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு.வி.பி.சிங், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவரும் மேற்கு வங்காள முதலமைச்சருமான ஜோதிபாசு ஆகியோரை பிரதமர் நரசிம்மராவ் சந்தித்து தனது அரசுக்கு ஆதரவளிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மேலும் பல அரசியல் கட்சிகளின் தலைவர்களைத் தாம் சந்திக்க இருப்பதாகவும் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

சபாநாயகர் தெரிவில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெறுவார் என்றும் நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவித்தார். (உ-எ)

## பளையில் இளம் ஆசிரியை வெட்டிப் படுகொலை!

தாளையடி, ஜூன் 27

பளைப் பகுதியிலுள்ள தர்மக்கேணி என்னுமிடத்தில் ஆசிரியை ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம் பெற்றது.

தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த செல்வி. குமாரசாமி தர்சனா (வயது 24) என்பவரே கொலையுண்டவர் ஆவார்.

பாடசாலை முடிவடைந்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, யாழ் -கண்டி வீதியிலிருந்து சுமார் 200 யார் தூரத்திலுள்ள— குடிசனம் எதுவுமற்ற— ஒழுங்கை ஒன்றில் வைத்து அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

கழுத்து, வயிறு, கை ஆகியவற்றில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

கொலையுண்டவர் அணிந்திருந்த சங்கிலி மட்டும் காணாமற் போயிருந்தது.

காதணி, மோதிரம், மணிக்கூடு ஆகியன அப்படியே இருந்தன.

இவரின் சடலம் பளை ஆஸ்பத்திரியில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. பளை திடீர் மரண விசாரணை அதிகாரி மு. குமாரவேலு மரண விசாரணையை நடத்தி கொலை எனத் தீர்ப்பளித்தார். (ஈ-144-117)

## முச்சந்தி முரளி



அப்ப ...... ஜேர்மனியிலை எங்களின்ரை மாப்பிளைமார் முழிசிக் கொண்டிருப்பினம் கண்டியளோ......!

## முக்கியஸ்தர் பலரின் வீடுகள் குண்டு வெடிப்பினால் சேதம்

### சிறிமா இல்லமும் தப்பவில்லை

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் கூட்டுப் படைத் தலைமையகக் குண்டு வெடிப்பின்போது எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்காவின் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளும் நொறுங்கின.

அச்சமயம் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் அவரது வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

குண்டுவெடிப்பில் சேதமடைந்த 50 வீடுகளில் பிரபல தொழிலதிபர் என்.யு. ஜெயவர்த்தனா, சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் ரஞ்சித் அபேயசூரிய, பிரபல வழக்கறிஞரும் நாடாளுமன்ற

(4 ஆம் பக்கம் பாரக்க)

## விளையாட்டு வினையானது!

## ஷெல்லை அறுத்த இளைஞர் உடல் சிதறிப் பலியானார்!!

யாழ்ப்பாணம், ஜூன் 27

விளையாட்டு வினையானது!

தேடுவாரற்றுக் கிடந்த ஷெல்லை எடுத்து வாள் தகட்டினால் அறுத்தபோது அது வெடித்துச் சிதறியது!! வெட்டிய இளைஞன் உடல் சிதறிப் பலியானான்!!!

அரியாலை அகதி முகாமில் நேற்றுப் பிற்பகல் 2-15 மணியளவில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றது.

திருகோணமலையிலிருந்து அகதியாக வந்த குமாரசாமி கிருஷ்ணபாலன் (உப்புவெளி- வயது 15) என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ)

## ஆசிரியர் இடமாற்றத்துக்கு குடாநாட்டில் புதிய திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரியர்களுக்குப் புதிய இடமாற்றத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களாகக் கணிக்கப்படும் இடங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கும் விதத்தில் புதிய இடமாற்றத் திட்டம் அமைந்துள்ளது.

இடமாற்றத் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்று பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

புதிய இடமாற்றத் திட்டத்தின் பிரகாரம் தேவைப்படும் பட்சத்தில் பின்வரும் வகைகளைச் சேர்ந்தோர் கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

★ வெளி மாவட்டத்திலும், யாழ். மாவட்டத்தில் கஷ்டப் பிரதேசத்திலும் 5 ஆண்டுகளுக்குக் குறைவாகச் சேவையாற்றிய 45 வயதுக்குட்பட்ட ஆண் ஆசிரியர்களும், 40 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியர்களும்

★ கஷ்டப் பிரதேசத்தில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாதவிடத்து, வெளி மாவட்டத்திலும், யாழ். மாவட்டத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நேற்றைய உதயனில் வெளிவந்த வெங்கடேஸ்வரனின் பேட்டியின் முழுவிவரம் 3 ஆம் பக்கத்தில்

## லொறிகள் வருகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 27

கடந்த இருவாரங்களாக வவுனியாவில் தரித்து நின்ற லொறிகள் வடக்கே வரத் தொடங்கியுள்ளன.

இதனால் தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய், சவர்க்காரம், போன்றவை தாராளமாக கடைகளில் வாங்கக் கூடியதாக உள்ளன.

பொருள்களினது விலைகளிலும் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

(ஒ-3-15)

## தம்பலகமத்தில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

திருகோணமலை மாவட்டம், தம்பலகமத்தில் கடந்த 23 ஆம் திகதி இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த சுரேன், லோஜன் ஆகிய இருவருமே வீரமரணமடைந்தனர். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஷோகேஸ் இரண்டு விற்பனைக்கு உண்டு. சீக்கோ, கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி. (17339)

கூரைத் தகரங்கள் சிறிய நெளி 32G 6' 7' 8' 9' வரை விற்பனைக்கு உண்டு சீக்கோ, கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி. (17338)

சாலி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சீக்கோ, கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி. (17337)

அலங்கார பந்தல விற்பனைக்கு உண்டு. சீக்கோ, கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி. (17336)

## ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 89 17 மின்சார நிலைய வீதி, 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/0170]

## கைமாறிவிட்டது

கடந்த 28 - 5 - 91 இல் Lumala 'A21298' இ. இற்குப் பதிலாக 'A 51633' Lumala வை தவறுதலாக மாறிக் கொண்டு சென்றவர்கள் தயவுசெய்து மின்வரமுசவரியில் சைக்கிளை மாற்றிக் கொள்ளவும். ... சீலன், 41/21, செம்மண்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (1172)

## குடும்ப ஆலோசனை

Family Counselling பிறப்பு, இறப்பு, விவாகம், சாவி உறுதிப் பதிவுகள், மொழி பெயர்ப்புகள், குடும்பப் பிரச்சினைகள், கணவன்- மனைவி உறவுகள் ஓய்வூதியம், வங்கிகள், நிதி நிறுவனங்கள், தொழில் பயிற்சிகள், சமூக சேவைகள், கொடுப்பனவுகள் தொடர்பான ஆலோசனைகள் இரகசியம் பாதுகாக்கப்படும். P.S Thiruchelvam, 210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (17341)

# SPECIAL ENGLISH

## விசேட ஆங்கில வகுப்பு

*An Integrated Course*

ஒருங்கிணைந்த கற்கை நெறி

( பாடசாலை விலகியோருக்கும், தொழில் பார்ப்போருக்கும் உகந்தது )

**ஆரம்பம்: 29 - 06 - 1991**

மு. ப. 9-30 a. m.

**ஆசிரியர்:** த. ந. பஞ்சாட்சரம்

**விசேட குறிப்பு:** ஜூன் 1990 இல் மேற்படி வகுப்பில் கற்ற மாணவர்கள் தொடர்ந்தும் கற்க உரிமையுடையர்.

மேலதிக விவரங்களுக்கு:

நிர்வாகி:

*NEW SCIENCE ACADEMY*

KANNATHIDDY, JAFFNA.

(சி-0179)

# 45வது நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 09 — 1975

மறைவு: 11 — 05 — 1991

## செல்வன் சாமுவெல்ராஜ் டானியல் சுதர்ஸன்

**அன்பு நண்பா!**

அன்பும் பணிவுமார்ந்த விவேகமும் செயற்றிறமும்
உன் பெரும் புகழ்
வானமே அண்ணாந்து நோக்கவேண்டிய
உன் உயர் புகழ்
பரிணாமம் அடைய முன்பே நீ வானுலகெய்தியமை
எமது தவக்குறைவே
உனது ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கிறோம்.

உன் பிரிவால் வாடும்:

**11ஆம் ஆண்டு மாணவர்கள்,**
**[1991 ஆம் வருடம்]**

யா / யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.

[17347]

தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி
தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் வடிசாலை சமாசம் — வரணி

# பதவிகள் வெற்றிடம்

**1. கணக்காளர் (9)**

சம்பளத்திட்டம் 1105 — 2170
60 x 4 — 75 x 11

கல்வித்தகைமை:

(அ) கூட்டுறவு பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கு பதிவாளர் பதவியில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் ஒன்றின் கணக்குத்துறையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது

(இ) கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (உ. தரம்), க. பொ. த. (உ.. தரம்) கணக்கியலை உள்ளடக்கியதான பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்./கைத்தொழில் ஸ்தாபனத்தில் கணக்கியல் தொடர்பு துறையில் 2வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

**2. காசாளர் (10)**

சம்பளத்திட்டம்: 1005 — 1705
40 x 5 — 50 x 10

கல்வித்தகைமை:

(அ) கூட்டுறவு பணியாளர் (சா. தரம்) 2 அமர்வுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக கணிதம் / தூய கணிதம் - சிங்களம் / தமிழ் என்பனவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தியும் காசாளராக வியாபார நடவடிக்கைகளில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

**3. லிகிதர் (10)**

சம்பளத்திட்டம்: 1005 — 1705
40 x 5 — 50 x 10

கல்வித்தகைமை:

க. பொ. த. (சா. த) எண்கணிதம் / கணிதம் / வர்த்தககணிதம் / தூய கணிதத்துடன் தமிழ் மொழி உள்ளடக்கியதான 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் 1 வருடத்திற்குக் குறையாத லிகிதர் அனுபவமும்.

**4. களஞ்சியப் பொறுப்பாளர் (10)**

சம்பளத்திட்டம்: 1005 — 1705
40 x 5 — 50 x 10

கல்வித்தகைமை:

க. பொ. த. (சா. தரம்) எண்கணிதம்/தூய கணிதம் உள்ளடக்கியதான 6 பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையில் 1 வருட அனுபவமும்.

**5. காரியாலய சேவகர் (12)**

சம்பளத் திட்டம்: 855 — 1385
30 x 7 — 40 x 8

கல்வித்தகைமை:

8 ஆம் வகுப்பு கல்வித்தராதரப்பத்திரம் பெற்றவர்.

**தொழில் நுட்ப பதவிகள்**

**6. வடிகலன் இயக்குனர்:**

சம்பளத்திட்டம்: (வருடம்) - 24,000 — 36,000
9 x 600 — 8 x 900

தகைமைகள்:

தொடர்ச்சியாக 5 வருடகாலம் வடிசாலை இயந்திரம் இயக்கிய அனுபவம், க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சித்தி எய்தியவர்.

**7. மூலப்பொருள் கொள்வனவு உத்தியோகத்தர்:**

சம்பளத்திட்டம்: (வருடம்) - 21,600 — 31,800
10 x 480 — 9 x 600

தகைமைகள்:

3 வருட அனுபவத்துடன் இரசாயன பாடம் உட்பட ஒரே தடவையில் க. பொ. த. (உ. த.) சித்தி எய்தியவர்.

**8. போத்தலடைப்பு உத்தியோகத்தர்:**

சம்பளத் திட்டம்: (வருடம்) - 21,600 — 31,800
10 x 480 — 9 x 600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 13 — 11 — 1960

உதிர்வு: 10 — 05 — 1991

## அமரர் சி. அருளானந்தம்
(பாபு)

தெல்லிப்பளை - கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சி. சிவலிங்கம் [ தந்தை செல்வா, தொடக்க நிலைப் பள்ளி அதிபர்] அவர்களின் அன்பு மகன் செல்வன் அருளானந்தம் அவர்கள் 10-05-1991 இல் அகால மரணமடைந்தமை குறித்து இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை - பூபதியும்,
சகோதரர்களும், மைத்துனர்களும்.

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

(17348)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



வியனுலகு: 15 — 11 — 1932

விண்ணுலகு: 28 — 05 — 1991

## திருமதி
## ராசதுரை மங்கையர்க்கரசி

குலத்தின் நிலைக்களமாய், குடும்பத்தின் ஒளிச்சுடராய், அன்பின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்த எங்கள் குலவிளக்கே எங்கு சென்றாய் அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று 27-06-91 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளின் போது சமூகம் தந்து, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், பேரமகள்,
மருமக்கள், மைத்துனர், சகோதரிகள்.

162, ''பாலாகோட்''
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(17344)

தகைமைகள்:

தொழிலாளர் வலுமிக்க உற்பத்தி நிலையம் ஒன்றில் 7 வருட அனுபவத்துடன் க. பொ. த. (உயர்தரம்) சித்தி.

விண்ணப்பங்களை ''பொதுமுகாமையாளர் தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி தெங்கு, ப. பொ. கூ. சங்கங்களின் வடிசாலைச் சமாசம், கச்சாய் வீதி-கொடிகாமம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு வயது எல்லை 25—40 வருடங்கள் ஆகும்.

குறிப்பு: மேற்படி பதவிகளுக்கு அனுபவம் மிக்கவர்களுக்கும், வெற்றிடமாகவுள்ள பதவிகளை தற்காலிகமாக வகிப்பவர்களுக்கும் நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15 - 07 - 1991**

பொது முகாமையாளர்,
தென்மராட்சி / பச்சிலைப்பள்ளி,
தெ. ப. பொருள் கூட்டுறவுச் சங்கங்களின்,
வடிசாலை சமாசம் - வரணி - கொடிகாமம்.

25 - 06 - 1991

[17345]

## உதயன்

### உண்மை தெரிவது சந்தேகமே!

கொக்கட்டிச்சோலையில் நடந்த கோரம் குறித்து விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஜனாதிபதி, மூவர் அடங்கிய ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறார். இந்த விவகாரத்தில் அரசாங்கம் அதிக அக்கறையுள்ளதாகக் காட்டிக் கொள்வதிலும், அவசரப்படுவதிலும் நோக்கம் இல்லாமல் இல்லை.

மனித உரிமை மீறல்கள் குறைந்துவிட்டதாகவும், மனித உரிமைகளைப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் காட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்து வரும் காலம் இது. காரணம்? மேலைநாடுகள் பலவும் நிதி உதவி வழங்குவதற்கு மனித உரிமை மீறல்களைச் சம்பந்தப்படுத்தி நிபந்தனை விதிக்கத் தொடங்கிவிட்டன என்பதேயாம்.

இதேவேளை—

கொக்கட்டிச்சோலை நிகழ்வு இராணுவத்தினரின் அத்துமீறல், அடாவடித்தனம் என்பவற்றினால் உண்டான படுகொலைகள் அல்ல என்றும்—

விடுதலைப் புலிகளுடன் இராணுவத்தினர் நடத்திய மோதலின் இடையில் அகப்பட்டே அத்தனை பொதுமக்களும் இறந்தனர் என்றும் —

கொலையுண்ட பொதுமக்களை விடுதலைப் புலிகள் மனிதகேடயமாகப் பயன்படுத்தியதாலேயே இக்கொலைகள் நிகழ்ந்தன என்றும் — சோடிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதையும் காணலாம்.

கொக்கட்டிச்சோலைக் கோரம் குறித்துக் கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்டு வரும் தகவல்கள், கட்டுரைகள் அதற்கான முன்னோடிகளாகவும், அத்திவாரங்களாகவும் அமைந்துள்ளன! கொலையுண்டவர்களின் எண்ணிக்கை, விடுதலைப் புலிகளின் பிரசாரத் தேவைக்காகப் பெரிதுபடுத்தப்பட்டுள்ளதாகக்கூட அவை எழுதத் தொடங்கிவிட்டன.

அதாவது உண்மையாக நடந்த நிகழ்வை மறுபக்கம் திருப்பி, இராணுவ ஆட்டூழியம், அத்துமீறல் நடக்கவில்லை என்று காட்டுவதற்கான சகல உத்திகளும் புனையுரைகளும் தொகுக்கப்பட்டு வருகின்றன!

56 பேரின் சடலங்களை, இராணுவத்தினரின் பணிப்பின் பேரில் தாங்களே புதைத்ததாக நான்கு கிராமவாசிகள் தெரிவித்திருக்கின்றனர். பிரதமர் தலைமையில் அமைச்சர் ஒருவர் உட்பட்ட உயர் அதிகாரிகள் குழுவிடம் அவர்கள் இதனைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் முப்பது விடுதலைப்புலிகளையும் ஆதரவாளர்களையும் மோதலில் ராணுவத்தினர் கொன்றதாக லெப்டினன்ட் குடலிகம என்பவர் தமது அணிக்குப் பொறுப்பான பிரிகேடியர் அனகம்மனவுக்கு அறிவித்திருந்தார் என்று கொழும்புப் பத்திரிகைகளில் "கதை" கூறப்படுகிறது.

இது போன்ற தகவல்கள் அத்திவாரமாக அமையும் போதும், சம்பவம் நடந்த உடன் அந்த இடத்தை பிரதமர் உட்பட எவருமே பார்க்க அனுமதிக்கப்படாத நிலையிலும், ஆணைக்குழு விசாரணை மூலம் உண்மை வெளிவரும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

பிரெஞ்சு வைத்தியக் குழு மீதான விமானத் தாக்குதல் சம்பந்தமான விசாரணைக் குழுவின் அறிக்கை எவ்வாறு அமைந்தது என்பது இப்போது சர்வதேசத்துக்கும் வெளிச்சமாகிவிட்ட ஒன்றாகும். கொக்கட்டிச்சோலை விசாரணையும், அறிக்கையும், அதே வகை சாரும் என்று ஏன் சந்தேகிக்க முடியாது?

# பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு குறைந்ததே ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம்

## வெங்கடேஸ்வரன் கூறுகிறார்

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த சமயம், அவருடனான கருத்து வேறுபாடுகள் காரணமாக வெளியுறவுச் செயலாளர் பதவியைத் துறந்தவர் வெங்கடேஸ்வரன்.

இவர் கடந்த வாரம் கொழும்பில் தங்கியிருந்த சமயம் அங்கிருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்திருந்தார்.

அந்தப் பேட்டியின் சில பகுதிகள் நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தன. இன்று அவரது பேட்டி கேள்வி — பதில் வடிவத்தில் முழுமையாகப் பிரசுரமாகிறது.

கேள்வி: புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஜனவரியில் மூன்று நிபந்தனைகளை முன் வைத்திருந்தது. இப்போது புலிகள் 'நிபந்தனைகளற்ற நேரடிப் பேச்சுவார்த்தைக்கு' தயார் என அறிவித்திருக்கிறார்கள். இது தொடர்பாக உங்கள் கருத்தென்ன?

பதில்: இரு தரப்பினரும் எது வித நிபந்தனையுமில்லாமல் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகிவிடும். இந்தியாவைப் பற்றி இலங்கையில் என்ன தான் பேசப்பட்டாலும் இலங்கையின் ஐக்கியம் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பாக இந்தியா அடிக்கடி பிரகடனம் செய்யும் கட்டுப்பாடு இலங்கைக்கு இருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்று என்பதை மறக்கக்கூடாது.

காலப்போக்கில் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படலாம். அத்தகைய மாற்றம் ஏற்படுகின்றபோது இந்தியா கூடுதலாக எதையும் செய்யாமலேயே—நேரடியாக சம்பந்தப்படாமலேயே — ஈழம் உருவாகக்கூடும்.

கேள்வி: ஆகவே எந்தவிதமான முன் நிபந்தனையையும் முன் வைக்காமல் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று கூறுகிறீர்களா?

பதில்: ஆம், அப்படித்தான் புலிகளும் எந்த விதமான நிபந்தனையையும் முன் வைக்காமல்தான் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறதே.

### கணக்கில் எடுக்க முடியாது

கேள்வி: எதிர்காலத்தில் இடம் பெறக்கூடிய எந்தவொரு சமாதானப் பேச்சுவார்த்தையிலும் ஏனைய சகல தமிழ் குழுக்களும் பங்கேற்க வேண்டும் என்பது அரசாங்கம் முன் வைக்கும் நிபந்தனைகளில் ஒன்றாகும். ஆனால், புலிகள் இதை ஏற்றுக் கொள்வதாகஇல்லையே?

பதில்: அது நடைமுறையில் சாத்தியமானதா இல்லையா என்பதை இலங்கை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும். உண்மையிலேயே புலிகளைத் தவிர ஏனைய தமிழ்க் குழுக்களில் ஏதாவது ஒன்று கணக்கில் எடுக்கப்படக்கூடியதாக இருக்கிறதா என்பதை எவராவது நேர்மையுடன் கூற முடியுமா?

கேள்வி: அந்த அடிப்படையிலே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாங்கள்தான் என்ற உரிமைக் கோரலை நிரூபிப்பதற்கு ஏதுவாக நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு புலிகள் இணங்க வேண்டுமே?

பதில்: பேச்சுவார்த்தைகளின் பின்னர், புலிகள் அவ்வாறு இணங்குவார்கள் என நான் நிச்சயமாக நம்புகிறேன். முன்னரேயே தேர்தல்களில் போட்டியிடாமல் விட்டதன் மூலம் புலிகள் பெரிய தவறொன்றை செய்து விட்டார்கள் என நான் நினைக்கிறேன். ஆனால் அந்தத் தேர்தல்கள் மிகவும் விசேஷித்த சூழ்நிலைகளின் கீழ் இடம்பெற்றவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, கொழும்புக்கு தாங்கள் கூட்டிச் செல்லப்படுவதை ஆட்சேபித்த 17 புலிகள் இயக்க உறுப்பினர்கள்பலாலி விமான நிலையத்தில் சயனைட் வில்லைகளை உட்கொண்ட சம்பவத்தின் விளைவாக இலங்கை-இந்திய [ராஜீவ்-ஜே. ஆர். ஒப்பந்தம்] சமாதான உடன்படிக்கை நிலை குலைந்து போன சூழ்நிலை அது. எனவே, தேர்தல்களில் பங்கேற்பதென்பது புலிகளுக்கு சங்கடமானதாகிவிட்டது. ஆனால், பின்னர் வந்த தேர்தல்களில் பதிலாட்கள் மூலம் அதை புலிகள் செய்தனர். அந்தப் பதிலாட்கள் வென்றனர்.

### 25 சதவீத மக்கள் கிளர்ச்சி நிலையில்

கேள்வி: 1987 ஜூலை இலங்கை – இந்திய சமாதான உடன்படிக்கை 'இறந்து' விட்டதென நீங்கள் கூறியிருக்கிறீர்கள். ஆனால், இலங்கை இனப்பிரச்சினையை உடன்படிக்கையின் எல்லை வரையறைக்குள்தான் தீர்த்து வைக்கப்பட முடியும் என இந்திய அரசாங்கம் வலியுறுத்துகிறதே? உங்கள் கருத்தென்ன?

பதில்: பஞ்சாப் உடன்படிக்கை என்றாலென்ன, அசாம் உடன்படிக்கை என்றாலென்ன, இந்தியா கைச்சாத்திட்ட பல உடன்படிக்கைகளின் அடிப்படையிலே இந்தியாவிற்குள்ளேயே அதன் பிரச்சினைகள் அரசாங்கத்தினால் தீர்க்கப்பட்டிருந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். நாம் அதைச் சாதித்தோம், இதைச் சாதித்தோம் என அரசாங்கங்கள் சொல்லிக் கொண்டுதானே இருக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டிய தேவை அதிகாரத்தை பரவலாக்க வேண்டியதன், உண்மையான அவசியத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் முற்றுமுழுதாக இல்லாவிட்டாலும் ஓரளவு தூரத்திற்கு உருவாக்குவதில் உடன்படிக்கை பயனளித்தது என அவர்கள் கூறுவதில் சரியிருக்கலாம்.

உண்மையிலேயே உடன்படிக்கையை அவதானமாக நோக்கினால், அதன் ஏற்பாடுகள் பண்டாரநாயக்கா— செல்வநாயகம் உடன்படிக்கையின் ஏற்பாடுகளிலும் பார்க்க கணிசமான அளவு குறைவானவையாகவே உள்ளன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

சமாதான உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகள் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் உடன்படிக்கையில் ஏற்கனவே உள்ளன. எனவே, மேலும் முன்னோக்கிய செயற்பாடுகள் தொடர வேண்டும், ஏனென்றால் நாட்டு சனத்தொகையில் 25 சதவீதமானவர்கள் கிளர்ச்சி நிலையில் இருக்கிறார்கள். அவர்களை அடக்கி ஒடுக்கி விட முடியும் என்பது சாத்தியமானதல்ல. அது கேள்விக்கு அப்பாற்பட்டது.

கேள்வி: இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது மாகாணசபைகள் திட்டத்தை புலிகள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் இப்போது அவர்கள் இந்திய மாநிலங்கள் அனுபவிக்கும் அதிகாரங்களைவிட கூடுதலான அதிகாரங்களை உடைய சமஷ்டி அமைப்பு முறையொன்றை கோருகிறார்கள். இது குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: ஒரு நாட்டில் உள்ள நிலைவரம் இன்னொரு நாட்டில் ஒத்ததாக இருக்க முடியுமென நான் நினைக்கவில்லை. யதார்த்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டே அது அமைய வேண்டும்.

சமஷ்டி அமைப்பு முறையொன்றையே தாங்கள்விரும்புவதாக புலிகள் கூறுவார்களேயானால், அது விடயத்தில் எந்தளவு தூரத்திற்கு நகரலாம் என்பதை தீர்மானிக்க வேண்டியது இலங்கை அரசாங்கத்திற்குரியது. இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இந்தியா அதன் தற்போதைய நிலைப்பாட்டையே எப்போதும் கடைப்பிடிக்கும் என்று கருதுவது மிகவும் தவறானது என்பதே எனது உறுதியான அபிப்பிராயம்.

கேள்வி: புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என அரசாங்கம் விரும்புகின்றது. இது முக்கிய பிரச்சினைகளில் ஒன்று. இந்த வேண்டுகோளை புலிகள் ஏற்று இணங்கிக் கொள்ளப் போவதில்லை. எனவே, எவ்வாறு மேற்கொண்டு செல்வது? ஒரு குழுவிடம் ஆயுதங்கள் இருக்கும் நிலையில் ஏனைய குழுக்கள் தேர்தல் ஒன்றில் போட்டியிடப் போவதில்லையே?

பதில்: இங்கு ஒரு பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. அதை என்னால் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த தடவை பேச்சுவார்த்தைகள் முறிவடையும் வரை ஆயுதங்களை கொண்டு திரிவது பற்றி எதுவித முன் நிபந்தனையும் இருக்கவில்லை. பேச்சுவார்த்தையை அவர்கள் தொடங்கலாம். பின்னர் நிலைமைகள் எவ்வாறு போகின்றன என்பதை பார்க்கலாம். தொடர் முயற்சிகளின் ஆரம்பத்திலன்றி இறுதியில் நடைபெறப் போகின்ற ஒரு விடயத்தைப் பற்றி முன்கூட்டியே நாம் ஏன் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தான் கூடுதல் முக்கியமானது.

### இந்தியா பெருமை அடைய முடியாது

கேள்வி: ராஜீவ்காந்தி கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக இந்தியாவில் உள்ள பல அரசியல்வாதிகள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படுமானால், தென்னிந்தியாவிலே இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் கிளம்புமா?

பதில்: அது ஒரு சசப்பான நிலைமையாகவே இருக்கும். இலங்கையிலே இந்திய அமைதிகாக்கும் படை இருந்தபோது, வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே இடம்பெற்ற நடவடிக்கைகள் குறித்து இந்தியா பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது என்பதை பலர் உணர்வார்கள் என்பது நிச்சயம். என்றாலும், ராஜீவ்காந்தி கொலை போன்ற சம்பவத்தை தேவைக்கு அதிகமாக மிகைப்படுத்தி விவகாரங்களை பார்க்கக் கூடாது.

அக்கொலை ஒரு படுபாதக குற்றச் சம்பவம். ஆனால், போரிலே ஈடுபட்டு ஆயிரக்கணக்கான மக்களை பலி கொடுத்த நாடுகள் மீண்டும் சமாதானம் செய்து கொண்டிருப்பதை அரசுகளுக்கிடையிலான உறவுகளில் நாம் கண்டிருக்கிறோம். இதை நாம் மறுத்தலாகாது. ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு சம்பந்தம் இருக்கின்றது என எண்ணி நிலைமைகளை அளவுக்கு அதிகமாகப் பெரிதுபடுத்தக் கூடாது.

### புலிகள் — ராஜீவ் உறவு

கேள்வி: ராஜீவ்காந்தியைக் கொலை செய்வதற்கு புலிகளுக்கு ஏதாவது நோக்கம் இருந்தது என நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: சூழ்நிலைகளை அவதானிக்கும் போது ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கு புலிகளுக்கு நோக்கம் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் அவர்கள் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியிருந்தனர். ராஜீவ்காந்தியுடன் மார்ச்சில் பேச்சு நடந்தது எமக்குத் தெரியும். அத்துடன் அவர் புலிகளுடனான தொடர்புகளை புதுப்பிப்பதில் சாதகமான பதிலையே அளித்துமிருக்கிறார்.

கேள்வி: அத்தகைய சந்திப்பு ஒன்று இடம்பெற்றதற்கான பதிவுச் சான்று எதுவும் இல்லையென்றே தோன்றுகிறது. புலிகள்தான் சந்திப்பு இடம்பெற்றதாகச் சொல்லியிருக்கிறார்கள்!

பதில்: இந்தியாவில் பெரிதும் மதிக்கப்படும் செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான "இந்து" இதை ஊர்ஜிதப் படுத்தி இருக்கிறது. ராஜீவ் காந்திக்கும், புலிகளுக்கும் இடையே சந்திப்பு நடந்ததாகவே அது திட்டவட்டமாக கூறுகிறது. அதையே நாம்ஏற்கவேண்டியிருக்கிறது.

கேள்வி: புலிகள் இயக்கம் "துரோகப் பேர்வழிகளின் கும்பல்" என ராஜீவ் காந்தி வர்ணித்திருந்ததாக நான்கு நாட்கள் கழித்து "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டிருந்ததே?

பதில்: தனது கருத்தைக் கூறுவதற்கு ராஜீவ் காந்தி உரித்துடையவர். ஆனால், எனக்குத் தெரிந்தவரை எந்த ஒரு விவகாரத்திலுமே நிலையான அபிப்பிராயம் ஒன்றை கொண்டிருந்தவர் என்ற பெயரை ராஜீவ் காந்தி பெறவில்லை. மேலதிகமாக நான் எதையும் கூற விரும்பவில்லை. ஏனென்றால், இறந்து போனவரைப் பற்றி நாம் விரோதமாக பேசுவதில்லை.

அவர் மரணமடைந்த பின்னர் அவருக்குச் செய்யப்பட்ட பல புகழஞ்சலிகள் இந்திய அரசியலுக்கு அவர் செய்த பங்களிப்புகள் பற்றிய அர்த்தமுடைய மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்தவை என்பதிலும் பார்க்க நல்லெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டே கூடுதலாக அமைந்திருந்தன. ★

# குண்டு வெடிப்புக் குறித்து
# முன் எச்சரிக்கை கிடைத்தும் தடுக்காதது வெட்கக்கேடு!

## அமைச்சர் சொன்னராம்

கொழும்பு, ஜூன் 27

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் குண்டு வெடித்த சம்பவம் இடம் பெறுவதற்கு முன்பாக கொழும்பு றோயல் கல்லூரிக் கட்டடத்துக்குள் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக தொலைபேசியில் அநாமதேயநபர் ஒருவர் பொலிசாருக்கு தகவல் கொடுத்தார்.

அவரைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலிஸார் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை—

கொழும்பில் குண்டு வெடிப்பொன்றை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கடந்த இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பே பாதுகாப்புப் படையின் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்து அது குறித்து பாதுகாப்பு அமைச்சின் உயர் மட்டத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்-

இதனையடுத்து அமைச்சர்கள், அரசியல்வாதிகள், முக்கிய பிரமுகர்கள் தமது பயணத்தின் போது புல்லர்ஸ் வீதி, திம்பிரிகஸ்ய போன்ற இடங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பு ஒன்று நடைபெறும் என்று முன்னேறு பாட...அதனை தடுக்க முடியாமற் போனது பெரும் "அவமானம்" "வெட்கக்கேடு" என்று அமைச்சர் ஒருவர் கூறியதாக "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விண்வெளியில் நடந்தனர்

மாஸ்கோ, ஜூன் 27

ரஷ்ய விண்வெளி வீரர்கள் இருவர் நேற்று விண்வெளியில் நடந்து விண்தளத்தின் அன்ரனாவில் ஏற்பட்ட கோளாறைத் திருத்தினர் என்று அறிவிக்கப்பட்டது. (அ)

### கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

29 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த அதிபர்கள் சங்கக் கூட்டம தவிர்க்க முடியாத காரணங்களால் பின் போடப்பட்டுள்ளது. [த]

### பண்டிதமணி தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 93 ஆவது பிறந்த தினம் இன்று ஜூன் 27 ஆம் திகதியாகும்.

அவர் சில வருடங்களுக்கு முன் அமரத்துவம் அடைந்தது தெரிந்ததே. (அ)

### யோகாசனப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 27

அகில இலங்கை சர்வமத யோகாசன நிறுவனத்தின் வருடாந்த யோகாசனப் போட்டி அடுத்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறும்.

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் நிறுவன இயக்குநர் சுவாமி சிதானந்த சரஸ்வதி யோகியுடன் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ள வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. (அ)

# குஞ்சுப்பரந்தன் சந்தியில் மினிபஸ் குடைசாய்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 27 வவுனியாவில் இருந்து சங்குப்பிட்டி நோக்கி வந்து கொண்டிருந்த மினி பஸ் ஒன்று நேற்றுக் காலை குஞ்சுப்பரந்தன் சந்தியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

காயமடைந்த வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சண்முகலிங்கம் பரஞ்சோதியம்மா (வயது 43) கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றும் சிலர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

மற்றும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்லப்பா குமாரவேல் (வயது 65) என்பவர் பார்வையிழந்த கண்ணுக்கு கொழும்பில் சிகிச்சைபெற்று சுகமடைந்து வந்தார்.

அவர் இவ் விபத்தின் காரணமாக மீண்டும் பார்வையை இழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## நினைவஞ்சலி கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27 யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனான லெப்டினன்ட் சுதர்சன் (பூ. சிவகுருநாதன்) லெப்டினன்ட் நித்திலா (நா. பவானி) ஆகிய இரு வீரவேங்கைகளினது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (ஓ-5)

ராஜீவ் கொலை விசாரணை:

# நளினி வேலையில் இருந்து இம்மாதமே விலகினாராம்!

சென்னை, ஜூன் 27 ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் நளினி அடையாறிலுள்ள சித்தெடிக் றபர் தயாரிக்கும் தனியார் கம்பனி ஒன்றில் செயலர்ளராகப் பதவி வகித்தவர் என்றும் இம் மாத ஆரம்பத்திலேயே, அவர் அப்பதவியிலிருந்து விலகினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் 7 ஆம் திகதி வரை நளினி காரியாலயத்திற்கு சமுகமளித்திருப்பதை விசாரணை புலப்படுத்துகின்றன. மறுநாளான 8 ஆம் திகதி ஒரு சனிக்கிழமையாகும். விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை காலை மாற்றுச் சாவி ஒன்றை பயன்படுத்தி காரியாலயத்திற்குள் புகுந்த அவர் தவிர்க்க முடியாத காரணங்களால் தான் பதவி விலகுவதாக கூறும் குறிப்பொன்றை விட்டுச் சென்றதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மறுநாள் காரியாலயம் திறக்கப்பட்ட போது அந்தக் குறிப்பு கண்டு பிடிக்கப்பட்டது. சி. பி. ஐ. குழு அந்தக் குறிப்பையும், நளினி தொடர்பான சகல ஆவணங்களையும் கைப்பற்றியதுடன், அலுவலக ஊழியர்களையும் தீவிரமாக விசாரணை செய்தது.

நளினிக்கு வயது 27, நகரக் கல்லூரியின் பொருளாதாரத் துறை மாணவியான அவர் சென்னை பல்கலைக் கழகத்தில் பொருளாதார பட்டப்பின் படிப்பை தபால் மூலம் கற்று வந்தார்- தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், அலுவலக முகாமைத்துவம், வியாபாரத் தொடர்புகள், டெலக்ஸ் செயற்படுத்துகை ஆகிய பாடநெறிகளிலும் சித்தியடைந்திருந்த நளினி இந்த கம்பனியில் ஒன்றரை வருடங்களாக அதன் நிர்வாக இயக்குநரின் செயலாளராகவும், சுருக்கெழுத்தாளராகவும் பணியாற்றி வந்தார்.

மிகவும் புத்திசாலியான நளினி எளிமையும், அடக்கமும் நிறைந்தவர் என்று வர்ணிக்கப்படுகிறார். ராஜீவ் கொலை போன்ற குரூரமான குற்றச் செயலில் அவர் சம்பந்தப்பட்டிருக்கும் சாத்தியம் குறித்து, அறிந்து அவரது சிநேகிதிகளும், சகாக்களும் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

மேலும் நளினியின் சகோதரன் பாக்கியநாதன் நடத்தும் அச்சகத்திலிருந்தே இந்தக் காரியாலயம் காகிதாதிகளைக் கொள்வனவு செய்து வந்ததாகவும் . இப்போது தெரியவந்துள்ளது.

தற்போது தேடப்பட்டு வரும் பெண்ணான சுபா மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்னர் ஒரு தடவை மாத்திரம் நளினியை காரியாலயத்தில் வந்து சந்தித்து விட்டு சென்றிருக்கிறார்.

தாஸ் எனப்படும் முருகன் கடந்த சில மாதங்களாக காரியாலயத்தில் பல தடவைகள் நளினியைச் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. (த)

# சிவராமனையும்சுபாவையும் பிடிக்க விசேட அதிரடிப்படை

சென்னை, ஜூன் 27 ரஜீவ்காந்தியின் கொலை தொடர்பாகத் நடைபெறும் ரகுவரன் என்ற சிவரர்மன் மற்றும் சுபா ஆகிய இருவரையும் கண்டு பிடிப்பதற்காக விசேட அதிரடிப்படை ஒன்றை சி. பி.ஐ. அதிகாரிகள் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இருவரும் ஜேர்மனிக்குத் தப்பிச் சென்றுவிட்டதாகச் சில செய்திகள் தெரிவித்துள்ள போதிலும், புலனாய்வாளர்கள் சென்னையில் தமது தேடுதல் நடவடிக்கைகளை இன்னும் கைவிடவில்லை என்றே தெரிகிறது.

இவ்விருவரையும் சென்னை என்னூர், புலக்காடு பகுதியில் கண்டதற்கான சான்றுகள் கிடைத்திருப்பதால் இன்னும் இவர்கள் தமிழகத்திலேயே இருப்பதாக நம்பப்படுகிறது.

இவர்கள் ஆயுதங்களுடனேயே இருப்பதாகக் கருதும் புலனாய்வுகள் மிகவும் தந்திரோபாயமாக அவர்களைக் கைது செய்வதிலேயே அதிக சிரத்தை காட்டுகின்றனராம். (த)

## சரத்பவார் பாதுகாப்பு அமைச்சர்

புதுடில்லி, ஜூன் 27 இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக திரு. சரத்பவார் நேற்று பதவி ஏற்றார்.

அவருக்கு பதவிப்பிரமாணமும் இரகசியக் காப்புப்பிரமாணமும் ஜனாதிபதி வெங்கட்ராமனால் செய்து வைக்கப்பட்டன. (ஓ-எ)

## சகோதரர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 27 "பற்றரி" போன்ற பொருளைக் கண்டெடுத்த சகோதரர்கள் இருவர் அதனை வைத்து விளையாடிக் கொண்டிருந்தபோது அது வெடித்துச் சிதறியது. அப்போது அவர்கள் இருவரும் காயமடைந்தனர்.

பண்டத்தரிப்பு வடலியடைப்பில் நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் தங்கராசா பிரதிபன் (வயது10), த.பிரதாபன் (வயது8) ஆகிய இருவரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ-15)

## ஜெயலலிதாவுக்கு தொண்டமானின் உபதேசம்

கொழும்பு, ஜூன் 27 உலகத் தமிழர்களின் பிரச்சினைகளை அன்புடனும் ஆதரவுடனும் அணுகும்படி தமிழகத்தின் புதிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை அமைச்சர் தொண்டமான் கேட்டுள்ளார்.

புதிய முதலமைச்சரை வாழ்த்தி அனுப்பிய செய்தியில் திரு. தொண்டமான் இவ்வேண்டுகோளை விடுத்திருக்கிறார். (இ-எ)

## ஜேர்மனி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளைச் சேர்ந்த அகதிகளில் சுமார் ஒரு லட்சம் பேரை அடுத்த வாரத்தில் இருந்து நிர்ப்பந்தமாக வெளியேற்ற ஜேர்மன் அரசு தீர்மானித்திருக்கிறது.

திருப்பி அனுப்பப்படவுள்ள இவ்வெளிநாட்டார் மேன்முறையீடு செய்யின் அவர்கள் வசிக்கும் மாநிலத்தை நிர்வகிக்கும் அரசாங்கம் திருப்பி அனுப்பும் உத்தரவை விரும்பினால் குறைந்தது 6 மாத காலங்களுக்கு ஒத்திவைக்க முடியும் என்றும் —

அதற்கு மேல் ஒத்தி வைக்கும் காலத்தை நீடிக்கும் அதிகாரம் ஜேர்மன் சமஷ்டி அரசின் உள்துறை அமைச்சருக்கு மட்டுமே புதிய சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருப்பதாகவும் நெதர்லாந்து வானொலி அறிவித்தது. (உ-எ)

## முக்கியஸ்தர்..,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான கே.என். சொக்ஸி, காலஞ்சென்ற தொழிலதிபர் உபாலி விஜேயவர்த்தன, இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் ஏ. டி.சிங், இந்திய தூதரக முதலாவது செயலாளர் ஏ.ஆச்சாரியா ஆகியோரது வீடுகளும் அடங்கும்.

மேலும், யூகோஸ்லேவிய நாட்டுத் தூதரகம், லயனல் வென்ட் கலையரங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான சிரர்வஸ்தி, ஓரியன்ற் கிளப், டுப்ளிக்கேசன் வீதியில் உள்ள கோணல் மார்க்கற், கொள்ளுப்பிட்டி அபான்ஸ் மூக்குக் கண்ணாடித் தொழிலகம் ஆகிய கட்டடங்களும் குண்டு வெடிப்பினல் சேதமடைந்தன. (ஓ-5)

கொழும்பு குண்டு வெடிப்பு:

# பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சிறிமா கண்டனம்

கொழும்பு, ஜூன் 27 கொழும்பு மாநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த அரசு தவறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தாம் விடுத்த அறிக்கை ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா முன்கண்ட குற்றச்சாட்டை வெளியிட்டார்.

கார்க் குண்டுத் தாக்குதலில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகமே அழிந்தது. இதில் பல இராணுவத்தினர் உட்பட 57 பேர் உயிரிழந்தனர் என்றும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அறிக்கையில் கூறியுள்ளார். (ஓ-எ)

## ஆசிரியர் இடமாற்ற....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன் கஷ்டப் பிரதேசத்திலும், 8 ஆண்டுகளுக்குக் குறைவாகச் சேவை புரிந்தவர்களும், 45 வயதுக்குட்பட்ட ஆண் ஆசிரியர்களும், 40 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியர்களும்

★ கஷ்டப் பிரதேசத்தில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாதவிடத்து, யாழ்ப்பாண மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேல் சேவை செய்தவர்களும், 45 வயதுக்குட்பட்ட ஆண் ஆசிரியர்களும், 40 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியர்களும்

★ கஷ்டப் பிரதேசத்தில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாதவிடத்து. 1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்கள்.

★ புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்கள்.

★ ஜீ. சீ. ஈ. (உயர்தர) வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளில் இருந்து சந்தர்ப்பத்துக்கு ஏற்ப விதிவிலக்களிக்கப்படும்.

★ பயிலுனர் ஆசிரியர்களும் மற்றும் கஷ்டப் பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்துக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையோடு நியமிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்துக்கான கஷ்டப் பிரதேச சேவையை முடிக்காத ஆசிரியர்களும் பொது இடமாற்றம் செய்யப்பட முடியாதவர்களாகக் கருதப்படுவர்.

★ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற காலம் இடமாற்றத் திட்டத்தில் சேவைக்காலமாக கணிக்கப்படமாட்டாது. (அ-3)

கலை, வர்த்தகக் கல்லூரி
C. C. A.
வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்.
G. C. E. (A/L) 91
DAY CLASSES
ஆரம்பம்: 27 - 06 - 1991 காலை 8-00 மணி
G. C. E. A/L 92
புதிய பிரிவு ஆரம்பம்: 29 - 06 - 1991
சனிக்கிழமை
[சி-0182]

வைத்திய நிலையம் இடமாற்றம்
"சதா மெடிக்கல் சென்ரர்"
ஆஸ்பத்திரி வீதி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையில் இயங்கிய வைத்திய நிலையம் தற்போது யாழ்ப்பாணம், நல்லூர், அரசடி வீதி, பாரதியார் சிலையின் முன் 181 ஆம் இலக்கத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்குகின்றது.
Dr. சதா கிருஷ்ணதாஸ்
M. B. B. S., M. C. G. P.
(D. M. O. Kayts)
[17340]

நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை - 3 ஆவது
5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான மேற்படி 3 வது பரீட்சை 30 - 06 - 91 ஞாயிறு பி. ப. 2- 00 மணிக்கு நடைபெறவுள்ளது.
விவரங்களுக்கு:
நிர்வாகி.
(0177)

இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

28 - 06 - 1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 - 30 மணிக்கு யாழ். அடைக்கலமாதா (ஓ. எல். ஆர்.) பாடசாலை மண்டபத்தில் திரு. எம். எஸ். வின்சன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட, பிராந்திய, உள்ளூராட்சி, பிரதேச சபைகளில் உத்தரவு பெற்று, அந்தந்தப் பகுதிகளில் வியாபாரம் செய்யும், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் அனைவரும் தவறாமல் சமுகம் கொடுக்கவும்.

கூட்டத்தில் சகல வியாபாரிகள் பிரச்சினைகளும் ஆராயப்பட இருப்பதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெறும்.

க. இ. கிருஷ்ணன்,
செயலாளர்.

(சி/0148)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் கனகாம்பாள்

திருமதி ஆறுமுகம் கனகாம்பாள் கொழும்பில் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் (ஓய்வுபெற்ற அத்தியட்சகர், பப்ளிக்கேஷன் பீரோ) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் அனுஷா (அமெரிக்கா)வின் அன்புத் தாயாரும், டாக்டர் ஸ்ரீதரா (அமெரிக்கா)வின் மாமியாரும், மேனகாவின் பேர்த்தியும், காலஞ்சென்ற பகவதி இராஜதுரை, இராசமணி செல்லையா (ஆனைக்கோட்டை), ராசு பரமலிங்கம், காலஞ்சென்ற சரஸ் நாகலிங்கம், கணேசன், குமரேசன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-6-1991) காலை 8-30 மணியளவில் பார்ளி றேமண்ட் பார்லரில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கனத்தை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
V. கணேசன்.

ஜே2/2, அன்டேர்ஸன் பிளாட்ஸ்,
கொழும்பு-5.

(சி/0149)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் [illegible] 27-06-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org